2020 செப்டம்பர் 15]

4—

கூடுதல் கட்டடங்கள்

***28430—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, ஆரியப்படைவீடு ஊராட்சி, பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக இன்றைக்கு உலக நாடுகள் எல்லாம் அஞ்சி நடுங்குகின்ற இந்த வேளையில், 'மக்கள் நலன் ஒன்றே முக்கியம்' என்று ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, மக்களைக் காத்து வரக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் எங்களது அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், ஆரியப்படைவீடு ஊராட்சியில் உள்ள பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் குறைவான அளவில் மாணவர்கள் கல்வி பயின்று வருவதால், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். கொரோனா நோயினால் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியும் முடங்கிப் போயிருக்கிறது. கோவிட் 19 கொரோனா நோயினால் உலகமே முடங்கிப் போயிருக்கிற இந்த நேரத்தில், 'ஒருங்கிணைவோம் வா' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) 1½ கோடி நிருவாகிகளை தமிழகம் பூராவும் சுற்றி, சுற்றி வரவழைத்து, ஏழையெளிய மக்களின் துயரங்களை அன்றாடம் தீர்த்து வைத்த பெருமைக்குரிய எங்கள் உயிரினும் மேலான கழகத் தலைவரை நான் இந்த மாமன்றத்தின் மூலமாக வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றையதினம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள். திராவிடத்தின் திருவிளக்கு; தமிழகத்தின் ஒளிவிளக்கு; நம்மையெல்லாம் ஆளாக்கி, அடையாளம் காட்டிய பேரறிஞர் அண்ணாவினுடைய புகழ், தமிழகம் இருக்கும் வரை அவருடைய புகழ் ஓங்க வேண்டுமென்பதற்காக 112–வது பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டை அவர் நமக்குக் கற்றுத் தந்தார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல், இந்த மாமன்றத்தில் மூன்று முத்தான திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்து, தமிழகத்தைப் பெருமைப்பட வைத்தவர் நம்முடைய தலைவர் அண்ணா அவர்கள்.

நான் இன்றைக்குக் கேட்டிருக்கிற கேள்விக்கு சம்பந்தம் உள்ள அண்ணாவின் ஒரு கருத்தினை இப்போது தெரிவிக்கின்றேன். 7–9–1967 அன்று மதுரை பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் அண்ணா அவர்கள் உரையாற்றுகிறார்கள். "முழு வயிறு காணாதோர், முதுகெலும்பு முறிய பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர் ஆகிய இவர்களெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய்; கொடி மரமாய்; பாதையாய்; பகட்டுகளாய்; அமல்படுத்தும் அதிகாரிகளாய்; அறிவு பெற அமையும் பள்ளிக்கூடங்களாய்த் திகழ்கின்றன" என்றும்; "வியர்வை பணமாகிறது; வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக்கழகங்கள் முதல் தொடக்கப் பள்ளி வரை கட்டப்படுகின்றன" என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில், கும்பகோணம் தொகுதி, ஆரியப்படைவீடு, பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக்

2020 செப்டம்பர் 15]

கருத்தில் கொள்ளாமல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும், தனியார் பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லாமல் அரசுப் பள்ளிகளில் அதிகமாகச் சேரும் வாய்ப்புள்ள இந்த நேரத்தில், 'ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டின் வகுப்பறையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றது' என்ற கோட்பாட்டின்படி, கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட பம்பப்படையூர், ஆரியப்படைவீடு, அம்மாசத்திரம், அகராத்தூர், கீழப்பழையார், பூச்சாத்தனூர், குமரக்குடி ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு எல்லாம் புதிய வகுப்பறைகளைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, ஆரியப்படைவீடு ஊராட்சியிலுள்ள பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 38 மாணவர்கள் மற்றும் 53 மாணவிகள் என மொத்தம் 91 மாணவ, மாணவியர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயின்று வருகின்றனர். பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலா 2 வகுப்பறைகள் கொண்ட மூன்று கான்கிரீட் கட்டடங்கள் உள்ளன. மேலும், ஒரு கட்டடம் மேற்கூரை பழுதடைந்த நிலையில் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டிலுள்ள 3 கட்டடங்களில், 5 வகுப்பறைகளில் மாணவ, மாணவிகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஒரு வகுப்பறை தலைமையாசிரியரின் அலுவலகப் பயன்பாட்டில் உள்ளது. இப்பள்ளியில் 4 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் குறைவான அளவில் மாணவர்கள் பயின்று வருவதாலும், தற்போது பயன்பாட்டிலுள்ள 5 வகுப்பறைகள் உள்ள கட்டடங்களே போதுமான நிலையில் உள்ளதாலும், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. அதேபோல பல்வேறு ஊர்களைக் குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளிகளிலும், பிற்காலத்தில் அங்கே மாணவர் சேர்க்கை அதிகமானால், அவசியமிருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964–ல் கட்டப்பட்ட அகராத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரயில் ஓடு கட்டடம் தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளதால், அங்குள்ள நூலகத்தில் பள்ளி இயங்குகின்றது. 1962–ல் கட்டப்பட்ட பூச்சாத்தனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, மாணவர்கள் படிக்க இயலாத காரணத்தினால் கிராம இ–சேவை மையத்தில் இயங்கி வருகிறது. 1969–ல் கட்டப்பட்ட கீழப்பழையார் பள்ளிக் கட்டடத்தில் மாணவர்கள் படிக்க இயலாததால், அப்பள்ளி கிராம இ–சேவை மையத்தில் செயல்படுகிறது. அம்மாச்சத்திரம் ரயில் ஓடு பள்ளிக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் இ–சேவை மையத்தில் இயங்குகிறது. குமரக்குடி தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித் தரவும், மேற்கண்ட பள்ளிகளுக்கு ஏதாவது ஒரு திட்டத்தில் குறிப்பாக, RCIDS—ஊரகப் பள்ளி ஒருங்கிணைந்த சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், ஆரியப்படைவீடு பகுதியிலிருக்கிற பள்ளியில் மின்மாற்றியை மாற்றித் தர வேண்டும். ஏற்கெனவே, கும்பகோணத்தில் 2004–ல் சுமார் 100 குழந்தைகளுக்குமேல், தனியார் பள்ளி தீ விபத்தில் மரணமடைந்தது நமக்கெல்லாம் ஞாபகத்தில் இருக்கும். அந்த நிலை மீண்டும் அந்தப் பகுதியில் வரக் கூடாது என்று சொல்லி, அந்த மின்மாற்றியை மாற்றி, அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல பள்ளியைக் கட்டிக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்

2020 செப்டம்பர் 15]

தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிதிகள் ஒதுக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்த பின்னரும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஊரகப் பகுதியிலுள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் போதிய அளவில் புதிய கட்டடங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செயல்படுத்தும்பொருட்டு, பல்வேறு திட்டங்களின்கீழ் புதிய பள்ளிகள் கட்டும் பணி மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள், அவற்றுக்கான உட்கட்டமைப்புப் பணிகள், புனரமைத்தல், பழுதுபார்த்தல் போன்ற பராமரிப்புப் பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் தன்விருப்ப நிதி, தன்னிறைவுத் திட்டம், ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வட்டார ஊராட்சி பொது நிதி மேலாண்மை அமைப்பு போன்றவைமூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், குறிப்பாக, 2015–2016 வரையுள்ள ஐந்து ஆண்டுகளில் மட்டுமே 390 கோடியே 32 இலட்சம் மதிப்பில் 21,680 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசில் 2016–2017 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகாலத்தில் மேற்கூறிய நிதிமூலம் 198 கோடியே 68 இலட்சம் மதிப்பில் 7,874 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இதுவரை 6,833 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய 1,041 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பள்ளிகள் கண்டிப்பாக துறைரீதியாக ஆய்வு செய்யப்படும். அதேபோல, மின்மாற்றியைப் பற்றி குறிப்பிட்டார்கள். கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மாற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொன்னது குறித்து நான் ஒரு தெளிவு பெற விரும்புகிறேன். அந்தப் பள்ளியில் படிப்பது மொத்தம் 90 பிள்ளைகள். அங்கிருந்த மூன்று கட்டடங்களில் ஒரு கட்டடம் பழுதடைந்து விட்டது. மீதமுள்ளவை இரண்டு கட்டடங்கள். அவை எவ்வளவு அகலம், எவ்வளவு நீளம் என்று தெரியவில்லை. இதில் தலைமையாசிரியருக்கென்று தனியறை. இருப்பதோ 90 பிள்ளைகள். இதில் தலைமையாசிரியருக்கு தனியறையா? அது என்ன கல்லூரியா? ஆகவே, அந்த அறையையாவது பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கலாம். ஆகையால் உடனடியாக நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், அந்த அறையின் நீளம், அகலம் எவ்வளவு? நாம் மட்டும் கொரோனாவிலிருந்து நம் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு இவ்வளவு தூரத்தில் உட்கார்ந்திருக்கிறோம்.** அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்? அவர்கள் எல்லாம் ஒன்றாக இருப்பதா? ஆகையினால் அவர்களுக்கு ஏதாவது ஏற்பட்டால் அதற்கு **அதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆரம்பத்திலிருந்தே கான்கிரீட் கட்டடத்தில் ஐந்து அறைகளில் செயல்பட்டு வருகின்றது. ஒரு அறை தலைமையாசிரியர் அறையாகச் செயல்பட்டு வருகின்றது. நான்கு கட்டடங்களில் ஒரு ஓட்டுக் கட்டடத்தின் மேற்கூரைகள் 2017 முதல் பழுதடைந்துள்ளன. இப்பள்ளிக்கு போதிய வகுப்பறை வசதி இருப்பதால் பழுதடைந்த கட்டடத்தினை பழுதுநீக்கம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதுபோல், அங்கு பள்ளியே நடக்கவில்லை. வகுப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியாகச் செயல்பட்டுவரும் நிலையில் 91 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். நான்கு ஆசிரியர்கள் கொண்ட பள்ளியாக ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் சுற்றுச் சுவர், சமையற்கூடம், இருபாலருக்கான கழிப்பறை வசதிகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 செப்டம்பர் 15]

அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன காரணத்தினால் துறைமூலம் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக அவசியமிருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

மீன் வளக் கல்லூரி

***35841—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதியில் மீன் வளக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்தை உதிர்த்து, மறைந்தும் மறையாமல் நமது உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, நம்மையெல்லாம் ஆளாக்கிய பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினத்தில் அவர்களை வணங்கி, பொன்மனச் செம்மல், சத்துணவு தந்த சரித்திர நாயகன், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையும், வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் அன்றும், இன்றும் என்றென்றும் நிற்கின்ற, மாபெரும் தலைவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர்